**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 28.10.2025.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>அசல் வழக்கு எண். 68/2024</u>**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கன்னியப்பன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பெருமாள் | வயது | : | 65 |
| ஊர் | : | சிறுவேலியநல்லூர் | தொழில் | : | விவசாயம் |

**<u>வா.சா. 1 (கன்னியப்பன்): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தில் உள்ள ஜக்பந்தியில் புறம்போக்கு வழி என்று குறிப்பிட்டு அதை வாதியும், பிரதிவாதியும் வழியாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தானது ஆதியில் எனது பாட்டனார் எட்டியா கவுண்டர் பெயரில் இருந்து வந்து அதன் பிறகு வழக்கு அ அட்டவணை சொத்தானது என் தாயார் மூலம் எனக்கு கிடைக்கப்பெற்றும் வழக்கு ஆ அட்டவணை சொத்தானது பிரதிவாதிகளுக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்றும் சொன்னால் சரிதான். வழக்கு சொத்தானது எனது தந்தையாரும் பிரதிவாதிகள் தந்தையாரும் வாச்சா பிரிவினை செய்துகொண்டு எந்த பிரச்சனையும் இல்லாமல் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் இரண்டும் புஞ்சை நிலங்கள் என்று சொன்னால் சரிதான்.

2. வழக்கு சொத்தானது என் பாட்டனார் இருந்த காலத்திலும் அதன் பிறகு என் தந்தை மற்றும் சித்தப்பா அனுபவித்த காலத்திலும் ஆவணத்தின் படி வழக்கு சொத்து வழி என்று ஒதுக்கி அனுபவிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பிரதிவாதியுடன் ஒரே நேரத்தில் பயிரிடாமல் வேண்டுமென்றே அவர்கள் பயிரை நாசம் செய்வதற்காகவே பின்னிட்டு பயிர் செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ அட்டவணைசொத்திற்கு செல்வதற்கு ஆ அட்டவணை சொத்தின் வழியாக செல்வதற்கு வழி எதுவும் இல்லை என்றும் அதில் வழி விடுவதற்கு வாய்ப்பும் எதுவும் இல்லை என்றும் சொன்னால் வழி இருக்கிறது ஆனால்

பிரதிவாதிகள் அதை தடை செய்கிறார்கள். மேற்படி வழக்கு சொத்தினை குறித்து அதை வழிக்காக பயன்படுத்துவதற்காக பரிவர்த்தனை ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் தாயார் வேங்கை அம்மாள் என்பவர் எனது சித்தி என்றால் சரிதான். அவர்களின் வீட்டை நான் 30.01.2024 அன்று இரவு 2.00 மணி அளவில் அவர்களின் ஓலை வீட்டினை கொளுத்துவிட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் புகார் கொடுத்தது உண்மைதான் ஆனால் நாங்கள் அந்த வீட்டை எரிக்கவில்லை. அவர்களே கொளுத்திக்கொண்டார்கள். மேற்படி வீட்டில் எனக்கும் பாகம் உண்டு என்பதால் பஞ்சாயத்து முன்னிலையில் எனக்கு பாகம் பிரித்துக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் மறுநாள் வந்து பிரித்துக்கொடுக்கலாம் என்று சொன்னாதால்தான் அவர்களே அந்த வீட்டை கொளுத்திவிட்டார்கள்.

3. இந்த பிரச்சனை நடந்த பிறகுதான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்பு வழி கேட்டு எந்த வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என் மீது புகார் அளித்ததை முன் விரோதமாக வைத்துக்கொண்டு வழக்கு சொத்தினை அ மற்றும் ஆ என்று வகைப்படுத்தி அதில் வழி வேண்டும் என்று பொய்யாக வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனது முன்னோர்களுக்கும் எனது தந்தை மற்றும் தாயாருக்கும் Easementary Right இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் முன் பயிர் வைத்தும் நான் பின்னிட்டு பயிர் வைப்பதால் அவர்கள் அறுவடை செய்வதை நான் தடை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள்தான் டிராக்டரை வைத்துக்கொண்டும் மண்வெட்டி கடப்பாறை முதலியவற்றை வைத்துக்கொண்டும் என்னை அறுவடை செய்யாமல் தடுக்கிறார்கள்.

4. பிரதிவாதிகள் மற்ற யாரையும் தடை செய்வதில்லை அதனால் என்னையும் தடை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் பிரதிவாதிகள் என்னை மட்டும்தான் தடை செய்கிறார்கள். வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2025.10.28 15:45:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு